

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, மும்பை புறநகர் மாநிலக் கழகத்திற்கு புதியதாக நியமிக்கப்பட்ட பொறுப்பாளர் அலிசேக் மீரான், பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பி.கிருஷ்ணன், வதிலை பிரதாபன், ஜேம்ஸ் தேவதாசன், இளங்கோ அப்பாதுரை, வே.சதானந்தன், வெ.அ. ஜெய்னுல் ஆப்தின், வீரை.சோ.பாபு, சிவகுமார் சுந்தர்ராஜ், மெஹபூப் பாட்சா, சோ.பா.குமரேசன், ச.சிலுவைதாசன் ஆகியோர் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின், தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி எஸ்.முருகன் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.5.2025) தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில் 457 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 1118 காவலர் குடியிருப்புகள் மற்றும் 211 கோடியே 57 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலை கட்டடத்திற்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் சைலேஷ் குமார் யாதவ், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர் முனைவர் மகேஷ்வர் தயாள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (19.5.2025) தலைமைச் செயலகத்தில், அரசு ஊழியர்களுக்கு ஆயுள் மற்றும் விபத்துக் காப்பீடு உள்ளிட்ட வங்கி சலுகைகளை கட்டணமின்றி வழங்கிட 7 முன்னோடி வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்வில், நிதித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நிதித்துறை செயலாளர் (செலவுகள்) எஸ்.நாகராஜன், கருவூலம் மற்றும் கணக்குகள் துறை இயக்குநர் திருமதி தி.சாருஸ்ரீ மற்றும் வங்கிகளின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.5.2025) முகாம் அலுவலகத்தில், அண்ணா அறிவாலயத்தில் பணிபுரியும் கே.கார்த்திக் பிரியன் – பெ. தீபிகா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்திவைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் அமைச்சர் சா.மு.நாசர், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, சட்டமன்ற உறுப்பினர்கள் மரு. நா.எழிலன், ப.தாயகம் கவி, பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகத் தலைவர் துறைமுகம் காஜா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை, கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டத்திற்கு நாடு முழுவதும் வரவேற்பு!

# ஆந்திராவிலும் அரசு பேருந்துகளில் பெண்கள் இலவசப் பயணம்!

## ஆக.15 முதல் அமலாகிறது! ஆந்திரா முதல்வர் அறிவிப்பு!

ஹைதராபாத், மே 20 -

ஆந்திராவில் ஆக.15 முதல் பெண்கள் அரசு பேருந்துகளில் இலவசமாக பயணிக்கலாம் என்று அம்மாநில அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. மகளிருக்கு பேருந்துகளில் இலவச பயணம் வழங்கும் திட்டம், டெல்லியில் கடந்த 2019ம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதற்கு கிடைத்த வரவேற்பையடுத்து பஞ்சாப் மாநில அரசும், தமிழக அரசும் 2021ம் ஆண்டு முதல் மகளிருக்கு பேருந்துகளில் இலவச பயணத் திட்டத்தை அறிமுகப்படுத்தின.

அதையடுத்து கேரளா, தெலங்கானா, கர்நாடகா, ஜம்மு - காஷ்மீர் ஆகிய மாநிலங்களிலும் மகளிர் இலவச பயணம் மேற்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த வரிசையில் 8வது மாநிலமாக ஆந்திராவுக்கு இணைந்திருப்பது இத்திட்டத்துக்கு நாடு முழுவதும் கிடைக்கும் வரவேற்பை வெளிச்சம் போட்டுக் காட்டும் விதமாக அமைந்துள்ளது.

ஆந்திரா மாநிலத்தில் சந்திரபாபு நாயுடு தலைமையிலான தெலுங்கு தேசம் கட்சி ஆட்சி நடத்தி வருகிறது. முதல்வராக பதவியேற்ற பிறகு, ஒவ்வொரு வாக்குறுதிகளையும் முதல்வர் சந்திரபாபு நாயுடு நிறைவேற்றி வருகிறார். அந்த வகையில், சட்டப்பேரவை தேர்தலின் போது, தெலுங்கு தேசம் கட்சி அளித்த சூப்பர் சிக்ஸ் வாக்குறுதிகளில் ஒன்றான பெண்களுக்கு இலவச பேருந்து பயணம் திட்டத்தை முதல்வர் சந்திரபாபு நாயுடு செயல்படுத்த உள்ளார். ஆந்திரப் பிரதேசத்தில் பெண்கள் ஆகஸ்ட் 15 முதல் அரசு நடத்தும் APSRTC பேருந்துகளில் இலவசமாகப் பயணிக்க முடியும் என அறிவித்துள்ளார். ஸ்வர்ண ஆந்திரா - ஸ்வச் ஆந்திரா திட்டத்தில் பங்கேற்க கர்னூலுக்கு சென்ற முதல்வர் சந்திரபாபு நாயுடு இலவச பேருந்து பயணத் திட்டத்தை அறிவித்தார்.

இதனிடையே மகளிருக்கு இலவச பயணம் அனுமதிக்கப்பட்டுள்ள மாநிலங்களில் நடத்தப்பட்ட ஆய்வில், குழந்தைகளை பள்ளிக்கு கொண்டு போய் விடுவது, வேலைக்குச் சென்று வருதல், மளிகை சாமான்கள் வாங்குதல், கோயில்களுக்கு செல்லுதல், உறவினர்களைப் பார்த்து வருதல், பொழுதுபோக்கு இடங்களுக்குச் சென்று வருதல் போன்றவற்றுக்கு இலவச பயணத்தை மகளிர் பயன்படுத்துவதாக கண்டறியப்பட்டுள்ளது. மகளிர் சுதந்திரமாக நடமாடுவதன் மூலம் பொது இடங்களில் அவர்களுக்கு பாதுகாப்பான சூழல் நிலவுவதாகவும் தெரியவந்துள்ளது. இதன்மூலம் மாதம் ஒன்றுக்கு சராசரியாக ரூ.500 வரை போக்குவரத்து செலவு மிச்சமாகிறது என்றும் மகளிர் தெரிவித்துள்ளனர்.

சவுக்கு சங்கர் தொடர்ந்த வழக்கு: உயர்நீதிமன்ற உத்தரவு நிறுத்தி வைப்பு!

# விடுமுறை நீதிமன்றத்தில் அவசரமாக விசாரித்தது ஏன்?

## உச்சநீதிமன்றம் கேள்வி!

புதுடெல்லி, மே 20 -

சென்னை உயர்நீதி மன்றத்தில் சவுக்கு சங்கர் தொடர்ந்த வழக்கை ஏன் அவசர அவசரமாக விடுமுறை கால நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டிய அவசியம் என்ன என கேள்வி எழுப்பிய உச்சநீதிமன்றம், சென்னை உயர்நீதி மன்றத்தின் இடைக்கால உத்தரவை நிறுத்தி வைத்து உத்தரவிட்டுள்ளது.

தூய்மை பணியாளர்கள் திட்டம் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் சவுக்கு சங்கர் தொடர்ந்த வழக்கை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தலித் இந்தியன் சேம்பர் ஆப் காமர்ஸ் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் (DICCI) மற்றும் ஜென் கிரீன் அமைப்புகள் மேல் முறையீடு செய்திருந்தது.

இந்த வழக்கு உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள், எதிர்த்தரப்பினரை விசாரிக்காமல் இந்த வழக்கை விடுமுறை கால நீதிமன்றத்தில் அவசர அவசரமாக விசாரித்து முடிப்பதின் தேவை என்ன? என கேள்வி எழுப்பினர். அப்போது இந்த வழக்கில் சவுக்கு சங்கர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், இந்த வழக்கில் தங்களை இணைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அனைத்து வாதங்களை கேட்ட நீதிபதிகள், தலித் இந்தியன் சேம்பர் ஆப் காமர்ஸ் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் (DICCI) மற்றும் ஜென் கிரீன் அமைப்பை இந்த வழக்கில் சேர்த்து விசாரிக்க வேண்டும் என்றும் அதன் பின்னர் அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட பின்பு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர். அதுவரை, சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவை நிறுத்தி வைத்து உத்தரவிட்டு உள்ளனர்.



நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் பாளையங்கோட்டை கே.டி.சி.நகர் ரவுண்டானா ஹோட்டல் காப்பர் லீப் கூட்டரங்கில் மாவட்ட அவைத் தலைவர் கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பங்கேற்று கழக நிர்வாகிகளின் கருத்துக்களை கேட்டறிந்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஞானதிரவியம், சித்திக், தொகுதி பார்வையாளர்கள் ஜோசப்ராஜ், சிவராஜ் மற்றும் ராஜம் ஜான் ஆகியோர் உள்ளனர்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி தலைமையில் நேற்று (19.05.2025) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத்துறை வளாகக் கூட்டரங்கில் 2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரித்துறை ஆணையர் முனைவர் டி. ஜகந்நாதன், இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி மொ.நா. பூங்கொடி மற்றும் வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்றத்தில் சிறந்த பங்களிப்பை வழங்கியதற்காக

# சி.என்.அண்ணாதுரை எம்.பி.க்கு தேசிய அளவிலான விருது!

## ‘சன்சத் ரத்னா’ விருதளிப்புக் குழு அறிவிப்பு!

புதுடெல்லி, மே 20 -

நாடாளுமன்றத்தில் சிறந்த பங்களிப்பை வழங்கியதற்காக தேசிய அளவிலான ‘சன்சத் ரத்னா’ விருதுக்கு திருவண்ணாமலை தொகுதி தி.மு.க. எம்.பி. சி.என்.அண்ணாதுரை தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

11 ஆண்டுகளுக்கு பிறகு இவ்விருது தமிழ்நாட்டுக்கு கிடைத்து உள்ளது. சன்சத் ரத்னா விருது குழுவின் 15வது ஆண்டு விருதுகள் வழங்கும் விழா புதுடெல்லியில் வரும் ஜூலை மாத இறுதியில் நடைபெற உள்ளது.

அதையொட்டி, விருது பெறுவோரின் பட்டியலை, ஒன்றிய அமைச்சருக்கு நிகரான தகுதியும் அரசியல் சாசனத் தகுதியும் பெற்ற தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவர் ஸ்ரீஹன்ஸ்ராஜ் கங்காராம்அஹிர் தலைமையிலான நடுவர் குழு வெளியிட்டுள்ளது.



அதன்படி, தனிநபர் விருதுகள் 17 எம்.பி.க்களுக்கு வழங்கப்படுகிறது.

மேலும், நாடாளுமன்றத்தின் இரண்டு குழுக்களுக்கும் விருதுகள் வழங்கப்பட உள்ளன. மேலும், சிறப்பு சன்சத் ரத்னா தேசிய விருதுகளைப் பெறும் 4 நபர்களின் பெயர்களையும் இக்குழு அறிவித்துள்ளது.

மக்களவை மற்றும் மாநிலங்களவை செயலகங்களின் அதிகாரப்பூர்வ பதிவுகளிலிருந்தும், பிஆர்எஸ் சட்டமன்ற ஆராய்ச்சி நிறுவனத்தில் இருந்தும் பெறப்படும் ஆதாரங்களின் அடிப்படையிலும், நாடாளுமன்றத்தில் பங்கேற்ற விவாதங்களின் எண்ணிக்கை, அறிமுகப்படுத்தப்பட்ட தனியார் மசோதாக்கள் எண்ணிக்கை மற்றும் எழுப்பப்பட்ட கேள்விகள் ஆகியவற்றின் அடிப்படையிலும் சன்சத் ரத்னா விருதுக்குரிய நபர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.

அதன்படி, திருவண்ணாமலை தொகுதி தி.மு.க. எம்பி சி.என்.அண்ணாதுரை சன்சத் ரத்னா விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். கடந்த 11 ஆண்டுகளுக்கு பிறகு தமிழ்நாட்டுக்கு இந்த விருது கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

திருவண்ணாமலை தொகுதி எம்.பி. சி.என். அண்ணாதுரை, கடந்த 2019ம் ஆண்டு முதன் முறையாக எம்.பி.யாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதைத்தொடர்ந்து, கடந்த 2024ம் ஆண்டு இரண்டாவது முறையாக திருவண்ணாமலை தொகுதியில் தேர்வு செய்யப்பட்டார்.

கடந்த 6 ஆண்டு காலத்தில், மக்களவையில் எழுப்பிய கேள்விகள், வருகைப் பதிவு, விவாதங்களில் பங்கேற்பு, தகவல் தொழில் நுட்பத் துறையை நவீன மயமாக்கல் தொடர்பாக இவர் கொண்டு வந்த தனிநபர் மசோதா விவாதத்துக்கு ஏற்கப்பட்டது உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில் அடிப்படையில் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், சன்சத் ரத்னா விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள எம்பி சி.என்.அண்ணாதுரை, திருவண்ணாமலையில் நேற்று முன்தினம் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலுவை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.